**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், ஆத்தூர்**

**முன்னிலை: திரு.S. அன்புதாசன், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஆத்தூர்**

**2026 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7 ஆம் நாள் சனிக்கிழமை**
**I.A. 1/2025 in O.S. No.174/2019**

1. திருமதி. ராமாயி அம்மாள்
2. திருமதி. தங்கத்தாய்
3. திருமதி. அசலையம்மாள்
4. திருமதி. போதும்பொண்ணு
5. திருமதி. மாரியம்மாள்
6. திருமதி. வள்ளி ..... மனுதாரர்கள்/வாதிகள்

**/எதிர்/**

1. பால்ராஜ்
2. செல்வராஜ்
3. ராமர் என்ற பெரிய தொத்தன்
4. கருப்பசாமி என்ற சின்ன தொத்தன்
5. ராஜீ (எ) பொட்டி ராஜ்
6. புளியம்மாள்
7. சங்கர்
8. பாண்டி
9. பிச்சைக்காரன்
10. நாகனம்பலம்
11. குண்டன் என்ற பொன்னுச்சாமி
12. மோகன்
13. தங்கராஜ்
14. பொன்னுச்சாமி .....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

15. திருமதி.பாப்பு

16. அஜீத்குமார் .....எதிர்மனுதார்கள்/மாறுதல் செய்யப்படவேண்டிய நபர்கள்

இம்மனுவானது 7.02.2026 இன்று இந்நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு. T.K.கோபாலன், திரு.M. விஜயகுமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இம்மன்றத்தால் பிறப்பிக்கப்படும்:

## <u>உத்தரவு</u>

மேற்படி வழக்கில் 7,8 வாதிகளை 15,16 பிரதிவாதிகளாக TRANSPOSE செய்ய வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுவுரை சுருக்கம்:–</u>**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 1–ம் வாதி. 2 முதல் 6 வாதிகள் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரிகள். 7–ம் வாதி மனுதாரர்களுடைய சகோதரர் லேட்.முருகனின் மனைவியாவார். 8–ம் வாதி மனுதாரர்களுடைய சகோதரர் லேட்.முருகனின் மகனாவார். மனுதாரர்கள், எதிர்மனுதார்/பிரதிவாதிகளின் பேரில் விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

இவ்வழக்கினை 7,8 வாதிகள் மனுதாரர்களோடு ஒத்துழைப்பு கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்தார்கள். வழக்கு தாக்கல் செய்யும் பொழுது

8–ம் வாதி மைனர், அப்போது அவருக்கு வயது 17, தற்சமயம் அவர் மேஜராகிவிட்டார். மனுதாரர்களோடு சேர்ந்து 7,8 வாதிகள் வழக்கு தாக்கல் செய்யும் பொழுது ஒத்துழைப்பு கொடுத்தவர்கள், தற்சமயம் மனுதாரர்கள் அனைவரும் 8–ம் வாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக்கொடுக்க வேண்டும் என வற்புறுத்தினார். 8–ம் வாதியின் செயல் வழக்கிடை சொத்தில் மனுதாரர்களுக்குள்ள உரிமைக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு செயல்பட்டு வருவதால், மனுதாரர்கள் 7,8 வாதிகளோடு சேர்ந்து வழக்கை நடத்தமுடியாத சூழ்நிலை உறுவாகியுள்ளது. வழக்கிடை சொத்தில் 7,8 வாதிகளுக்கு கூட்டு உரிமை உள்ளது. ஆதலால் 7,8 வாதிகளை இவ்வழக்கின் 15, 16 பிரதிவாதிகளாக TRANSPOSE செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாதரப்பினராக்கப்பட்டுள்ளார்கள்.

4) இனி தீர்மானிக்க வேண்டியது யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5). **<u>தீர்வு</u>**

அசல் வழக்கானது மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் மீது விளம்புகை பரிகாரமும் அதனை தொடர்ந்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 7, 8 வாதிகள் மனுதாரர்களோடு ஒத்துழைப்பு கொடுத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு தாக்கல் செய்யும்போது 8ம் வாதி மைனர் என்றும், தற்போது அவர் மேஜராகிவிட்டார் என்றும், 8ம் வாதியின் செயல் வழக்கிடை சொத்தில் மனுதாரர்களுக்குள்ள உரிமைக்கு இடையூறு செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு செயல்பட்டு வருவதால், மனுதாரர்கள் 7, 8 வாதிகளோடு வழக்கை நடத்த முடியாத சூழ்நிலை உறுவாகியுள்ளதாக கூறியுள்ளார்கள்

என்றும், 7, 8 வாதிகளுக்கு கூட்டு உரிமை உள்ளது என்று கூறியுள்ள நிலையில், 7, 8 வாதிகளை இவ்வழக்கின் 15, 16 பிரதிவாதிகளாக TRANSPOSE செய்ய வேண்டும் என கூறியுள்ளது இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வழக்கை இறுதியாக தீர்மானிக்க 7, 8 வாதிகளை 15, 16 பிரதிவாதிகளாக Transpose செய்து, இவ்வழக்கில் சேர்க்க வேண்டியது நீதியின் பொருட்டு மிகவும் அவசியமானதாகவும், இந்த மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எந்த எதிருரையும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், நீதியின் நலன் கருதி, 7, 8 வாதிகளை 15, 16 பிரதிவாதிகளாக Transpose செய்து இவ்வழக்கை மேல் நடத்த இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. 1ம் மனுதாரர்/1ம் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக**, இம்மனுவை அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியா கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 7ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.07 16:14:52 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.

<u>இணைப்பு:–</u>

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் – இல்லை

SUBRAMANIYAN ANBUTHASAN
Digitally signed by SUBRAMANIYAN ANBUTHASAN
Date: 2026.02.07 16:15:02 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,ஆத்தூர்.